1993 டிசம்பர் 30]

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத தலைவர் அவர்களே, ஓசூர் சிப்காட் பகுதி—2 திட்டத்தில் இப்போது 27 பெரிய, நடுத்தர, சிறிய தொழில்களுக்கு 282 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஒதுக்கப்பட்ட நிலத்தில் தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டு, இனி வரும் கால கட்டத்தில் மேலும் தொழிற்சாலைகள் தொடங்க நிலம் தேவைப்பட்டால், அதை விரிவாக்கம் செய்வதற்கு அரசு முயற்சி செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. ஏ. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓசூர் சிப்காட் பகுதி 2—லே தொடங்கப்பட்டிருக்கிற தொழிற்சாலைகளுக்கு மாநில அரசும் மத்திய அரசும் 'சப்சிடி' கொடுக்க வசதி இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். மாநில அரசைப் பொறுத்த வரையில், சிப்காட் வளாகத்தில் தொடங்கும் தொழிற்சாலைகளுக்கு அசையா சொத்துக்களின் முதலீட்டில் 15 சதவீதம் அல்லது அதிகப் பட்சமாக ரூ. 15 இலட்சம் வரை மானியமாக வழங்கப்படுகிறது. மத்திய அரசு எந்தவிதமான மானியமும் வழங்குவதில்லை என்ற விவரத்தை ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 92, திருமதி அ. தி. சரஸ்வதி, மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்.

92—

சத்தியமங்கலம் தொகுதியில் ஊனமுற்றோர், முதியோர், ஆதரவற்றோர் இல்லம் கட்டுதல்.

*22587—திருமதி அ. தி. சரஸ்வதி:

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சத்தியமங்கலம் தொகுதியில் ஊனமுற்றோர் இல்லம், முதியோர் இல்லம், ஆதரவற்றோர் இல்லம் கட்ட அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திர குமாரி: சமூக நலத் [illegible] அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவ[illegible]

இல்லை.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

திருமதி அ. தி. சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்தியமங்கலம் தொகுதி மிகவும் பின்தங்கிய பகுதியாகும். அங்கே அதிகமாக ஆதி திராவிடர் மக்களும், மலைவாழ் மக்களும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அந்தப் பகுதியில் நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே ஊனமுற்றோர் இல்லம், முதியோர் இல்லம், ஆதரவற்றோர் இல்லம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திர குமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடல் ஊனமுற்றோர் இல்லமும், முதியோர் இல்லமும் அரசால் நடத்தப்படுபவை அல்ல. தன்னார்வு நிறுவனங்கள் தான் அவற்றைச் சிறப்பாக நடத்தி வருகின்றன. அப்படி தன்னார்வு நிறுவனம் ஏதாவது சத்திய மங்கலம் தொகுதியில் இருந்தால், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் அந்தத் தன்னார்வு நிறுவனத்தை அரசுக்குப் பரிந்துரை செய்தால், நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 93, திரு. எச். எம். ராஜு, மாண்புமிகு வனத் துறை அமைச்சர்.

93—

தமிழ்நாட்டில் மாநில வனவள வாரியம் அமைத்தல்.

*11736—திரு. எச். எம். ராஜு:

மாண்புமிகு வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் மாநில வனவள வாரியம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாட்டில் மாநில வனவள வாரியம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.